# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் வகுதியின் III ஆம் தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் கீழுள்ள, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு திட்டம்**.- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் கூடிய புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்துக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (06 இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கல் நடைமுறைக்கு அமைவாக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனத்தை அமுல்படுத்தும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வி/தொழில் தகைமைகள் :***
உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) ***அனுபவம் :***

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சட்டத்தரணியாக மூன்று (03) ஆண்டுகளுக்கு குறையாத காலம் வினைத்திறனான தொழில் அனுபவத்தைக் பெற்றிருத்தல். (வினைத்திறனான தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்ற காலம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை தெளிவாக குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறை அலுவலராக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத, கீழே காட்டப்படும் கருமங்கள் தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல்.

(அ) வழக்கு தொடர்பான சட்ட செயற்பாடுகள் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்;
(ஆ) உடன்படிக்கை தொடர்பான சட்டபூர்வ செயற்பாடுகள்;
(இ) தொடர்புடைய சட்டங்கள் தொடர்பான சட்டபூர்வ செயற்பாடுகள்;
(ஈ) சட்ட வரைபு, சுற்றறிக்கை, ஒழுங்குவிதிகள் போன்ற சட்டபூர்வ ஆவணங்களை உருவாக்கும் செயற்பாடுகள்;
(உ) பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களால் நடத்தப்படும் சட்ட அல்லது நீதிமன்ற விசாரணை செயற்பாடுகள்;
(இந்த விடயங்கள் செயலாளர், திணைக்களத் தலைவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலமும், ஆவணங்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

(iii) ***உடற் தகுதி :***

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்குமான போதுமானளவு உடல் மற்றும் உள தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) ***ஏனைய தகுதிகள் :***

- இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்;
- விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகுதிகள் அனைத்து விதங்களிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது. உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் விதவைகள்/தபுதாரர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் விதிமுறைக்கேற்ப நீங்கள் அதற்கான பங்களிப்புப் பணத்தை செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டு நன்னடத்தை காலத்துக்கு உட்பட்டதாகும். பதவியில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு அமைவாக முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2014.01.21ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் துணை சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் தாண்டுவதற்கு முன்னதாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி தொடர்பான உரிய திறமையை பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலத்தில் சேவைக்கு இணைந்த அலுவலர்கள், நன்னடத்தை காலத்திற்குள் உரிய அரச கரும மொழித் திறமையை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ரீதியான ஏனைய உத்தரவுகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

4. **வயது எல்லை.-** விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும் என்பதுடன், 45 வயதை தாண்டக்கூடாது.

5. **சம்பள அளவுத் திட்டம்.-** இந்தப் பதவிக்கு ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரியதாகும். (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் SLI-2016 சம்பள வகுதியாகும். அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.)

6. தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்படும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளி | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சட்டத் துறை தொடர்பான பட்டப் பின் படிப்பு | 25 | |
| | அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சட்டத் துறை தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப் பின் படிப்பு சட்ட டிப்ளோமா (ஒரு ஆண்டுக்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சட்ட துறை தொடர்பான பட்டம் | | |
| | • முதலாம் வகுப்பு சித்திக்கு | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு உயர் சித்திக்கு | 10 | |
| | • இரண்டாம் வகுப்பு கீழ் சித்திக்கு | 07 | |
| | • சாதாரண சட்டமாணிப் பட்டத்துக்கு | 05 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பின் சித்திக்கு | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பின் சித்திக்கு | 05 | |
| | **குறிப்பு**: இறுதிப் பரீட்சையில் சிறப்பு சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மட்டும் 05 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். (ஆகக் கூடியது ஒரு தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்.) | | |

| *தொடர் இலக்கம்* | *விடயம்* | *புள்ளி* | *ஆகக்கூடிய புள்ளி* |
|---|---|---|---|
| *02* | **மேலதிக தொழில் அனுபவம்**<br>(i) மேலதிக தொழில் தகைமை<br><br>அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சட்ட துறை தொடர்பான ஒரு ஆண்டுக்கு கூடுதலான டிப்ளோமாவுக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு தலா 10 புள்ளிகள்)<br><br>அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சட்ட துறை தொடர்பான 06 மாதங்களுக்குக் கூடுதலானதும், ஒரு ஆண்டுக்கு குறைவான டிப்ளோமா பாடநெறிக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு தலா 05 புள்ளிகள்)<br><br>அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சட்ட துறை தொடர்பான 03 மாதங்களுக்குக் கூடுதலானதும், 06 மாதங்களுக்கு குறைவான டிப்ளோமா பாடநெறிக்கு<br>(ஒரு டிப்ளோமாவுக்கு தலா 03 புள்ளிகள்)<br><br>(இலக்கம் 01 கீழான புள்ளிகள் வழங்கப்பட்ட சாற்றிதழ் தவிர வேறு)<br><br>(ii) மேலதிக அனுபவம்<br><br>விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 2 (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம் தவிர (அடிப்படை தகைமை பெறுவதற்குத் தேவையான 03 ஆண்டு சேவைக் காலம் தவிர)<br><br>- ஒரு ஆண்டுக்கு தலா 05 புள்ளிகள் என்றவாறு ஆகக்கூடியது 25 புள்ளிகள்<br>- 06 மாதங்களுக்குக் கூடுதலானதும், ஒரு ஆண்டுக்கு குறைந்த : 02 புள்ளிகள்<br><br>* 15 ஆண்டுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த (இந்த சேவைக் காலம், விண்ணப்பதாரிக்காக வழங்கப்படும் சான்றிதழிலேயே குறிப்பிடப்பட வேண்டும்.) ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சனாதிபதி சட்டத்தரணி அல்லது ஒரு நீதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br><br>* மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அரசாங்க அலுவலர்கள் அல்லது தனியார் துறை அலுவலர்களுக்கு நிறுவன தலைவரால் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படும்போது விண்ணப்பதாரி சட்டம் தொடர்பான பதவியில் சேவையாற்றியதாக சேவை சான்றிதழ்/ சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | | *35* |
| *03* | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத்துக்கு தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாக கற்றிருந்தமைக்கு<br><br>அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் 01 ஆண்டு/ 1500 மணித்தியாலத்துக்கு குறையாத தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு<br><br>அரச அங்கீகாரம் பெற்ற நிறுவன தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு<br>- 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br>- 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | 10<br><br>07<br><br><br>05<br>03 | *10* |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளி | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|---|
| 04 | **மொழித் திறமை** | | 15 |
| | ஆங்கில மொழி மூலத்தில் கற்ற பட்டப் பின் படிப்பு பட்டம்/பட்டம்/பட்டப் பின்படிப்பு சட்டமாணி பட்டம்/சட்ட மாணிப் பட்டம் (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் பதிலளித்திருக்க வேண்டும்) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பான 01 ஆண்டு/ 1500 மணித்தியாலத்துக்கு குறையாத டிப்ளோமா பாடநெறிக்கு | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு | | |
| | - 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை** | | 15 |
| | (i) பொது அறிவு மற்றும் அறிவாற்றல் | 05 | |
| | (ii) சட்டத்துறையின் நவீன போக்குகள் தொடர்பான அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்து வெளிப்படுத்தும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 | |
| | **மொத்தம்** | | **100** |

**குறிப்பு**.- தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் உரிய காலப்பகுதி தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால், அவ்வாறான சான்றிதழ்களுக்கு உரிய காலப்பகுதிகள் தொடர்புடைய நிறுவனத்தின் மூலம் எழுத்துமூலம் உறுதிப்படுத்திக்கொண்டு சமர்ப்பித்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அவ்வாறு காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருக்காத மற்றும் காலப்பகுதியை உறுதிப்படுத்தாத சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்குதல் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்படாது.

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- அனைத்து வகையிலும் பூரணமான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தவர்கள் மட்டும் தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு சாற்றுப்படுத்தப்பட்ட பிதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்க வேண்டிய முறை**.-

(i) விண்ணப்பப்படிவம் 2020.11.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு கிடைக்க கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அந்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

ஆணையாளர்,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்,
பி பிரிவு 03 ஆம் மாடி,
செத்சிறிபாய, கட்டம் II,
பத்தரமுல்லை.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணபப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பப்படிவத்தை A4 அளவிலான தாளில் தயாரித்து முன் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 03 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 04 தொடக்கம் 05 வரையும் உள்ள வகையில் தயாரித்து தமது கையெழுத்தில் பூரணப்படுத்த வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் சட்ட அலுவலர் III ஆம் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் /சமாதான நீதவான் /சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 47,615.00 ஐ அல்லது அதற்கு கூடுதலான மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாக இல்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் இல்லாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.-** உங்களால் அனுப்பப்பட்ட விண்ணபப்பப்படிவத்தில் குறிப்பிடப்பபடிருக்கும் ஏதாவது தகவல் பொய்யானது என அல்லது தவறானது என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரிய வந்தால் உங்களது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தன்மை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்னர் தெரியவந்தால் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணக்குழுவிற்கு உரியதாகும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி வாசகங்களுக்கு இடையில் ஏதாவது ஒத்துவராமை அல்லது முரண்பாடுகள் ஏற்பட்டால் , அதன் போது சிங்கள மொழி வாசகம் வலுவுள்ளதாக இருக்கும்.

12. 2019.01.17 ஆந் திகதியில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய விண்ணபப்பப்படிவத்தை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளும் மீண்டும் விண்ணபப் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

13. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயன்முறையில் ஏதாவது முரண்பாடான நிலை ஏற்பட்டால் அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி
மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு
வதிசகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க
அமைச்சு.

2020, ஐப்பசி 29.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

(அலுவலக பாவனைக்காக மட்டும்)

(விண்ணப்பிக்கும் மொழி மூலத்துக்குரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்ற முடியாது.

1.0 1.1 முழுப்பெயர் (திரு. /திருமதி/செல்வி) : ..................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.2 முழுப் பெயர் :..................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
உதா: GUNAWARDHANA, M. G. B. S. K.

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு. /திருமதி/செல்வி) ..................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
..................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..................................................

2.3 தொலைபேசி இலக்கம் :
..................................................

3.0 3.1 பால் நிலை : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய கூட்டினுள் எழுதுக)

3.2 குடியியல் நிலை : திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(உரிய கூட்டினுள் எழுதுக)

3.3 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2020.11.30 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்ட திகதியில் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் தொடர்பான விபரங்கள் :

| தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|
| .................................................. | .............................. |
| .................................................. | .............................. |

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :........................

4.2 விண்ணபப் படிவம் கோரும் அறிவித்தலின் 06 ஆம் இலக்கத்தின் கீழான ஒவ்வொரு தகைமைகள் தொடர்பான விபரம் :

4.3 மேலதிக கல்வித் தகைமை :..................................................
..................................................

4.4 மேலதிக தொழில் தகைமை :..................................................
..................................................

4.5 மேலதிக தொழில் அனுபவம் :..................................................
..................................................

4.6 மொழித் திறமை :......................................................................................................................
..........................................................................................................................................

4.7 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு :......................................................................................
..........................................................................................................................................

5.0 நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
(உரிய கூட்டில் (✓) என அடையாளத்தை இடுங்கள்.)

| ஆம் | இல்லை |
|---|---|

..........................................................................................................................................

6.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறற்றது எனவும், சரியானது எனவும், அனைத்து பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டள்ளதாகவும், என்னால் செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்தல் தவறானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பது எனக்கு நன்றாக தெரியும் எனவும், அனைத்து சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

............................
திகதி :...................... விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7.0 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :-
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

............................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
திகதி :...................... அலுவலரின் கையொப்பம்.
முழுப்பெயர் :..............................
பதவி :................................
திகதி :..................................
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்.)

8.0 **திணைக்களத் தலைவரின் விதந்துரை** : (அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு மட்டும்)
மேலே விபரம் குறிப்பிட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் இந்த நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும், வேலை மற்றும் வரவு திருப்திகரமானது எனவும், அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை எனவும், இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கலாம் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...........................
பெயர் :.............................. திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
பதவிப்பெயர் :................................
முகவரி :..................................
திகதி :......................
(பதவி முத்திரையை இடவும்)

10-1065

---

திருத்தம்

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

### அரச நடன குழுவுக்கான நடன கலைஞர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நடன கலைஞர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தலுக்காக 2020.09.25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2020.11.13 ஆக திருத்தப்பட்டுள்ளது.

### அரச இசைக் குழுவுக்கான இசைக் கலைஞர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இசைக் கலைஞர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தலுக்காக 2020.09.25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2020.11.13 ஆக திருத்தப்பட்டுள்ளது.

தறணி அனோஜா கமகே,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

10-1221